Primarschule
Dübendorf

Usterstrasse 16
8600 Dübendorf
schule-duebendorf.ch

tamil

# பெற்றார், பிள்ளைகளுக்கான டொச் (Deutsch) மொழி வகுப்புகள் 2024-2025

## Kindergärten Dübendorf

### நடைபெறும் இடங்கள்.

<u>Kindergärten Nelkenstrasse, Schule Stägenbuck und Zwinggarten</u>:
**Kindergarten Nelkenstrasse**, Nelkenstrasse 10

<u>Kindergärten Schule Birchlen, Birchlenstrasse, Strehlgasse und Am Stadtrand:</u>
**Kindergarten Birchlenstrasse**, Birchlenstr. 48

<u>Kindergärten Gockhausen, Sonnenberg, Högler, Zelgli, Grüzenstrasse und Schule Wil</u>:
**Schulhaus Högler**, Wasserfurrenstrasse 7

நீங்களும் உங்கள் பிள்ளைகளும், மேலுள்ள விலாசத்தில் உள்ள எந்த கின்டர்கார்டனிலும் சென்று வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.



**வகுப்பு நேரங்கள்** - திங்கள்கிழமைகளில் 13.45 முதல் 15.25 வரை (எல்லா வகுப்புகளும்)

**வகுப்பு ஆரம்பம்** - திங்கள், 28.10.2024

**வகுப்பு காலம்** - முதலாவது கின்டர்கார்டன் வருடத்தில் ஒவ்வொரு திங்கள்கிழமையும் கோடை விடுமுறை வரை (Sommerferien)

### எந்தப் பிள்ளைகள், பெற்றார் இவ்வகுப்பில் பங்கெடுக்கலாம்?

கோடை விடுமுறையின் பின் உங்கள் பிள்ளையின் டொச் மொழித் திறன் கணிக்கப்பட்டு, தேவைப்படுமாயின் பெற்றாருடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தப்படும். அதன் பின்னரே எந்தப் பிள்ளையும் பெற்றாரும் இவ்வகுப்புக்கு போகவேண்டும் எனத் தீர்மானிக்கப்படும். ஒரு வகுப்பில் ஆகக்கூடியது 10-12 பேர் மாத்திரமே இருப்பர்.

### யார் என் பிள்ளையை வகுப்புக்கு கூட்டி வருவது?

பிள்ளையை வளர்ப்பவரே இதில் முக்கியப் பொறுப்பாளராக இருப்பார். ஆகவே தகப்பன் அல்லது தாயே இதன் பொறுப்பாளர்கள்.

### பிள்ளையின் இளைய சகோதரர்கள் பங்கெடுக்கலாமா?

ஆம், பங்கெடுக்கலாம்

### இவ்வகுப்பில் கற்றுக்கொள்ளப்போவது யாது?

உங்களுடன் உங்கள் பிள்ளையும் இணைந்து டொச் மொழியைக் கற்றுக்கொள்ளும். இதனூடாக பிள்ளை உற்சாகப்படுத்தப்படுகிறது, மேலும் நீங்கள் கற்றுக்கொண்டதை வீட்டில் மீண்டும் அப்பியாசிக்கலாம். நீங்களும் இந்நாட்டின் கல்வி முறைமைகளைக் கற்றுக் கொள்வீர்கள். ஆகவே உங்கள் பிள்ளைகளுக்கு இலகுவாக உதவி செய்யலாம். எப்படியாகப் பிள்ளையை பாடசாலைக்கு ஆயத்தப்படுத்துவது என்பதையும் கற்றுக்கொள்வீர்கள்.

### என் பிள்ளைக்கு எத்தனை டொச் மொழி வகுப்புகள் நடத்தப்படும்,?

பிற்பகல் நடத்தப்படும் டொச் வகுப்பு தவிர (Deutschnachmittag) மேலும் ஏறக்குறைய 3 மணித்தியாலங்கள் இதர உதவி கின்டர்கார்டனில் கிடைக்கும். இந்த நேரத்தில் 2 வகுப்புகள் டொச் மொழிக்கான உதவியும் கிடைக்கும்.

### வேறு கேள்விகள் ஏதேனும் உண்டா?

கோடைவிடுமுறையின் பின் உங்கள் பிள்ளைக்கு டொச் மொழி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் பிற கேள்விகளுக்குப் பதில் கொடுப்பார்.
அதற்கிடையில் வேறு கேள்விகள் இருப்பின், கின்டர்கார்டன் பொறுப்பான தலைவரிடம் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது பாடசாலை நிர்வாகத்தையும் (ளுஉாரடளநசறயடவரபெ) தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு விபரங்கள்.
Hanna Erasmus, Tel. 044 801 69 79
E-Mail: hanna.erasmus@duebendorf.ch

**www.schule-duebendorf.ch/elternabc**
மேற் குறிப்பிட்டுள்ள இணையதள முகவரியிலும் இவ்வகுப்புகளுக்கான தகவல்களை அறியலாம்.